# பா.ஜ.க.வின் ‘ரெய்டு’ அரசியலும் சரணாகதி அடைந்த அ.தி.மு.க.வும்’!

தமிழ்நாட்டில் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, ஆளும் கட்சியாக இருந்த அ.தி.மு.க.வின் தலைமை ஒன்றிய பா.ஜ.க. அரசின் அடிமையாக மாறியது. இதன் விளைவு, தமிழ்நாட்டில் கிட்டத் தட்ட 15 ஆண்டுகளுக்குப் பிறகு, 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமைந்தது. தாமரை சின்னத்தை தங்கள் தோள் மீது சுமந்து கொண்ட இ.பி.எஸ்.- ஓ.பி.எஸ். என்கிற இரட்டை தலைமை சந்தித்த முதல் தேர்தலாகும். ஆனால், 38 தொகுதிகளை கைப்பற்றிய தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அமோக வெற்றியால், பா.ஜ.க.—அ.தி.மு.க. கூட்டணி மண்ணை கவ்வியது. எனினும் ஒரே ஒரு தொகுதியில் ஓ.பன்னீர் செல்வத்தின் மகன் ரவீந்திர நாத் குமார் போட்டியிட்ட தேனியில் மட்டும் வெற்றி பெற்று ஆறுதல் தேடிக் கொண்டது. இந்தத் தோல்வியை தொடர்ந்தும், 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையில் தேர்தலை சந்திக்கும் என்று பாஜக அறிவித்தது. ஆனால், தமிழ்நாட்டைப் பொருத்த மட்டில் நாங்கள் தான் பெரிய கட்சி. எங்கள் தலைமையில் தான் கூட்டணி என்றது அ.தி.மு.க. இதனால் அ.தி.மு.க.வுக்கும் அண்ணாமலைக்கும் மோதல் வலுத்தது. நீயா? நானா? என்பதில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. பா.ஜ.க.வுக்கு 20 தொகுதிகள் மட்டும் கொடுத்தனர். இந்தத் தேர்தலிலும் அதிமுக பா.ஜ.க. கூட்டணிக்கு மரண அடிகிடைத்தது. இருப்பினும், 20 ஆண்டுகளுக்குப்பிறகு, தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நுழையும் வாய்ப்பு பா.ஜ.க.வுக்கு மீண்டும் கிடைத்தது. நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதில் இரண்டு தொகுதிகளில் தப்பிப் பிழைத்து வந்தது.

**“ஜெயலலிதா ஊழல்” விவகாரம்: புயலைக் கிளப்பிய ‘வேஸ்ட் லக்கேஜ்’!**

இந்தத் தேர்தல் முடிவுக்குப் பிறகு, அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே மீண்டும் கருத்து மோதல் வெடித்தது. “சொத்துக்குவிப்பு வழக்கில் ஊழல் செய்த காரணத்தால் தான் முன்னாள் முதலமைச்சர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார்” என்று ஜெயலலிதாவின் பெயரை நேரடியாக குறிப்பிடா மல் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கடுமையாக விமர்சித்தார் அண்ணாமலை. அண்ணாமலையின் விமர்சனம் அ.தி.மு.க. கட்சிக்குள் பெரும் புயலை கிளப்பியது. அண்ணாமலைக்கு எதிராக மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தினர். அண்ணாமலையை புரட்டி எடுத்த முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் டி.ஜெயகுமார், “இனி பா.ஜ.க.வுடன் கூட்டணியே கிடையாது” என்றும் ஆவேசத்துடன் அறிவித்தார். இந்த மோதல் வலுத்து கொண்டே சென்றது. அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் அண்ணாமலைக்கு எதிராக தீர்மானமும் நிறைவேற்றினர். “மாநிலத் தலைவர் என்ற பதவிக்கு தகுதி இல்லாத நபர் அண்ணாமலை. அ.தி.மு.க. என்கிற சிங்கக் கூட்டத்தை பார்த்து அண்ணாமலை என்கிற ‘சிறு நரி ஊளை இடுகிறது’. தமிழ்நாட்டில் தனித்து நின்றால் நோட்டாவுக்கும் கீழ் தான் அண்ணாமலைக்கு ஓட்டு கிடைக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அண்ணாமலை ஒரு ‘வேஸ்ட் லக்கேஜ்” என்றும் கடுமையாக விமர்சித்தனர்.

**எடப்பாடியின் வேஷம்!**

இவ்வளவு நடந்தும், மவுனம் காத்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, மக்களவை தேர்தல் நெருங்கும் நேரத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளை குறி வைத்து “அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி துண்டிக்கப்பட்டது. ஏன் இனிமேல் பா.ஜ.க.வுடன் கூட்டணி என்பதே அறவே கிடையாது” வேஷம் போட்டார். இதைத் தொடர்ந்து, அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் தனித் தனியாக கூட்டணி அமைத்து மக்களவைத் தேர்தலை சந்தித்தன. இந்த இரண்டு கூட்டணிகளை யும் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமன்றி புதுச்சேரி மாநில மக்களும் அடியோடு துடைத்து எறிந்தனர். தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதி களையும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற இந்தியா கூட்டணி மொத்தமாக அள்ளியது. நாடு முழு வதும் 400 தொகுதிக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று கொக்கரித்த பா.ஜ.க.வுக்கு தமிழ்நாடு மக்கள் ‘கடிவாளம்’ போட்டனர்.

**பா.ஜ.க.வின் அடுத்த கட்ட நகர்வு: ‘ரெய்டு அரசியல்’!**

இந்நிலையில், எந்த வகையிலாவது தமிழ்நாட்டில் கால் ஊன்ற வேண்டும் என்று குட்டிக் கரணம் அடித்துக்கொண்டு வரும் பா.ஜ.க., தனது அடுத்த இலக்காக, 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தலை குறி வைத்துள்ளது. இதற்காக ‘ரெய்டு’ என்ற அஸ்திவாரத்தை தொடுத்தது. அதில் எடப்பாடியும், எஸ். பி.வேலுமணியும் மாட்டிக்கொண்டனர். ஏற்கனவே, தங்களது நிரந்தர அடிமைகளாகவே மாறிவிட்ட ஓ. பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரன், சசிகலா ஆகியோரை கூட்டணியில் இணைப்பதற்கு எடப்பாடி பழனிசாமி சம்மதிக்க விட்டாலும் பரவாயில்லை; எப்படியாவது அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைப்பது என்பதுதான் அமித்ஷாவின் திட்டம். தங்களது கட்சியின் அர்ஜெண்டாவை நிறைவேற்ற,

**சி. ஸ்ரீராமுலு**
**கட்டுரையாளர்**

எடப்பாடியின் பழனிச்சாமி உறவினர் ராமலிங்கம் வீட்டில் வருமான வரி மற்றும் அமலாக்கத்துறை சோத னையை ஏவி விட்டார். தனது ஆதரவாளர்கள் வீடு, அலுவலகங்களில் பாய்ந்த சோதனையால் ஆடிப் போனார் எடப்பாடி. அடுத்ததாக, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலு மணியின் பினாமி அம்மன் அர்ஜூனன் வீட்டில் இரண்டு நாட்கள் ரெய்டு நடத்தினர். அத்துடன் விசாரணைக்காக அழைத்துச் சென்றதும் அடங்கிப் போனார் எஸ்.பி. வேலுமணி.

**எடப்பாடியின் திடீர் தில்லி பயணம்: மறைக்கப்பட்ட திட்டம்!**

இத்தகைய பின்னணியில், கட்சி நிர்வாகிகள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று தில்லிக்கு பறந்தார் எடப்பாடி பழனிச்சாமி. அவர் தில்லி சென்று சேர்வதற்குள், ரகசிய பயணம் குறித்த தகவலை சட்டப்பேரவையில் தேங்காய் உடைப்பது போல் உடைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இதனால் பதறிப் போன அ.தி.மு.க. நிர்வாகிகள் எஸ்.பிவேலுமணி, கே.பி.முனுசாமி என வரிசையாக தில்லிக்கு படை யெடுத்தனர். திடீர் பயணம் குறித்து தில்லியில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த எடப்பாடி பழனிச்சாமி, “அ.தி.மு.க. தில்லி அலுவலகத்தை பார்வையிட வந்ததாக” தெரிவித்தார். அப்போது அமித்ஷாவை சந்திக்கும் திட்டம் இல்லை என்றும் ஒரே போடு போட்டார். ஆனால் அன்றைய இரவே, அமிஷாவை தனியாக சந்தித்தார் எடப்பாடி. அவரைத் தொடர்ந்து, வேலுமணி அண்டு கோவும் அமிஷாவை சந்தித்தது. இந்தச் சந்திப்புகள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, “கோரிக்கை வைப்பதற்காக மட்டுமே சந் தித்தேன். கூட்டணிக்காக அல்ல என்றார். குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று நினைத்தார்.

**எட்டு மணி நேரத்தில் அம்பலமான அடிமை ஒப்பந்தம்!**

கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில் வெளிப்படும் என்பார்கள். ஆனால், எட்டு மணி நேரத்திற்குள் எடப்பாடி பழனிச்சாமியின் அடிமை ஒப்பந்தம் அம்ப லத்துக்கு வந்தது. “வருகிற 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணி அமைத்து போட்டியிடும்” என தனது சமூக வலைதள பக்கத்தில் அறிவித்தார் அமித்ஷா.

**அண்ணாமலைக்கு ஆப்பு!**

இந்த நிலையில், “பா.ஜ.க. கூட்டணியில் சேர்வதற்கு ஒரே தடை அண்ணாமலை தான். அவரை நீக்கிவிட்டு வேறு ஒருவரை நியமத்தால் பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கை கோர்க்க தயாராக உள்ளது” என்றும் “இதனால் தமிழக பா.ஜ.க. தலைவர் மாற்றப்படுவார்” என்றும் ஊடகங்கள் மூலம் செய்திகள் உலா விடப்பட்டன. பிறகு பா.ஜ.க. தலைவர் தேர்தல் என்ற நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் நயினார் நாகேந்திரன் மட்டுமே தலைவர் பதவிக்கு மனு தாக்கல் செய்தார்.

**குருமூர்த்தியுடன் சதித் திட்டம்**

இரண்டு நாள் பயணமாக தமிழகம் வந்த அமித்ஷா, ஆடிட்டர் குருமூர்த்தி உள்ளிட்ட ஆர்.எஸ்.எஸ். முக்கிய தலைவர்களை சந்தித்து சதித் திட்டத்தை தீட்டினார். அந்த திட்டத்தின்படி ‘மாயமானாக’ நயினார் நாகேந்திரனை காட்டி, அ.தி.மு.க. வைக் கைப்பற்றிய அமித்ஷா, “அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை அ.தி.மு.க. தலைமையில் சந்திப்போம் தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி அமைப்போம்” என்று கூறியிருக்கிறார்.

**சொத்துக்களைப் பாதுகாக்க அடிமைச் சாசனம்!**

கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்ததால் தான் சிறுபான்மை மக்களின் கணிசமான வாக்குகளை இழந்தோம்; ஒட்டு மொத்த மக்களின் நன்மதிப்பையும் அ.தி.மு.க. இழந்தது என்று அ.தி.மு.க. நிர்வாகிகள் பலரும் கட்சித் தலைமையிடம் புலம்பித் தள்ளினர். தங்க ளது ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தனர். ஆனால் அதே பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைத்து இருப்பது தேசத்தின் நலனுக்காகவும் மாநிலத்தின் வளர்ச்சிக்காகவும் அல்ல. கோடி கோடியாய் சுருட்டிக் கொள்ளையடித்து வைத்திருக்கும் தங்களது சொத்துக்களையும் பணத்தையும் பாதுகாத்துக் கொள்ள பா.ஜ.க.விடம் அடிமை சாசனம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்பதே உண்மை. மாநில உரிமைகளை பறிப்பதுடன் சிறுபான்மை மக்களை அந்நியப்படுத்தும் மதவெறிக் கும்பலிடம் தமிழ் நாட்டை அடகு வைப்பதற்காக பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கை கோர்த்து யார் மீது சவாரி செய்து வந்தாலும் எந்த உருவத்தில் வந்தாலும் தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். பா.ஜ.க.வை மட்டு மல்ல; அந்தக் கட்சியுடன் கூட்டணி சேரும் அத்தனை கட்சிகளையும் தமிழக மக்கள் நிராகரிப்பார்கள் என்று திண்ணம்.

**நன்றி: தீக்கதிர்**
**14.4.2025**

# தமிழ்நாட்டில் 100 நாள் வேலையை மோடி அரசு குறைத்து வருகிறது!

## வளத்தி பொதுக்கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!

செஞ்சி, ஏப். 15-

தமிழ்நாட்டில் 100 நாள் வேலையைமோடி அரசு படிப்படியாக குறைத்து வருவதாக வளத்தியில் நடைபெற்ற தி.மு.க.அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப்பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குற்றம் சாட்டினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 72 ஆவது பிறந்த நாள் விழா மற்றும் தி.மு.க. அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் வளத்தியில் நடைபெற்றது.


கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார் ஒன்றிய கழக நிர்வாகிகள் மன்ன ஏழுமலை, ஜெயசங்கர், செந்தில்குமரன், ராமமூர்த்தி, சரவணன், பெருமாள், ஆறுமுகம், தமிழரசி பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாவட்ட சிறுபான்மையினர் அணி பிரிவு அமைப்பாளர் ஷேக் ஷரிப் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சைகை சாதிக், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்,

தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நான்காண்டு காலத்தில் தமிழ்நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல் படுத்தி வருகிறார். முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் முதல் முதலமைச்சரின் உயிர்க்காக்கும் 24 திட்டம் என தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டங்களையும் சொல்லாத திட்டங்களையும் செய்து இந்தியாவுக்கேமுதன்மை முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

ஆனால் ஒன்றிய பா,ஜ,க, மோடி தலைமையிலான அரசு விவசாயிகளை வஞ்சித்து வருவதாகவும்,ஏழைவிவசாயிகள் வாங்கிய கடனையும் ஏழை மக்களுடைய வரிப்பணத்தை தள்ளுபடி



செய்யாமல் பத்து பணக்காரர்கள்வாங்கிய கடனை முழுமையாக தள்ளுபடி செய்தவர் பிரதமர் மோடி.

நாட்டில் தனி நபர் கடன் 1.56 கோடி ரூபாயாக ஏற்பட்டுள்ளதாகவும் 100 நாள் வேலை செய்யும் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் 100 நாள் வேலையை மூடி படிப்படியாக குறைத்து வருகிறார் 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மறுத்து வருகிறார். இந்திய நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ள விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்யாத பிரதமர் மோடி 10 பணக்காரர்களின் 14 லட்சம் கோடியை தள்ளுபடி செய்துள்ளார்.

கல்வித்துறைக்கும் ஊரக வளர்ச்சி துறைக்கும் ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக வழங்க வேண்டும் எனமுதலமைச்சர்கோரிக்கை வைத்துள்ளார் . ஆனால் முதலமைச்சர் கேட்ட நிதியை பிரதமர் மோடி வழங்காமல் மறுத்து வருகிறார். இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் காலாவதியான டோல்கேட் கட்டணம் 15 2 கோடி ரூபாய் முறைகேடாக வசூல் செய்துள்ளனர். தேசிய நெடுஞ்சாலையில்புதியதாக சாலைகள் அமைப்பதற்கு ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ஆனால் மோடி அரசு 29 கோடி ரூபாயில் சாலை அமைத்ததில் முறைகேடு நடந்துள்ளது. மேலும் தற்பொழுது கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளதால் சிலிண்டர் மற்றும் டீசல் பெட்ரோல் விலை குறையும் ஆனால் விலை குறைக்காத மோடி அரசு விலையை உயர்த்தி இந்த நாட்டினுடைய மக்களை வாட்டி வதைக்கின்றார் பிரதமர் மோடி. ஒன்றிய பாஜக மோடி ஆட்சியில் இந்தியாவில்பொருளாதாரம் சரிந்து வருகிறது ஆனால் தமிழ் நாட்டில் பெண்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்றனர் மோடி ஆட்சியில் இந்தியா கொள்ளை போகிறது . மணிப்பூர் பற்றி எரிகிறது, அமெரிக்காவில் இருந்த இந்தியர்களை கையில் விலங்கு போடப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திட்டங்கள் தலைமுறை தலைமுறையாகபேசப்படுகின்ற திட்டங்களாகவும், தலை முறை கள் நிலைத்து நிற்கும் திட்டங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

ஆனால் இந்திய மக்களை வஞ்சிக்கும் ஹிட்லர் ஆட்சியை நடத்தும் மோடிக்கு ஹிட்லர் கதி தான் ஏற்படும் என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

தொடர்ந்து மும்மொழிக்கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்திய திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட 700க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராம சரவணன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், நிர்வாகிகள் உதய குமார், ஆறுமுகம், அர்ஷத் பேக், ஜி.பி.எஸ். முருகன், ரகுராமன், சிவசக்தி, ரவிச்சந்திரன், கோபாலகிருஷ்ணன், எஸ்.பி. சம்பத், தோப்பு சம்பத், ராமசரவணன், டி.பி. ஏழுமலை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் நிர்மல்ராஜ், மணிகண்டன், மாணவர் அணி ஆறுமுகம் உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், தி.மு.க. நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் பத்மநாபன் நன்றி கூறினார்.




திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் சட்டமேதை டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆர்.எஸ்.ஆனந்தன், டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், கே.ஆர்.திருப்பதி, கோவிந்தம்மாள் பெருமாள், வீ.வடிவேல், தே.பிரபாகரன், மு.க.அருள்நிதி, எம்.சிங்காரவேலன், சையத்அபீப்தங்கல் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.



திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட மாடப்பள்ளி ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 18.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணியினை ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு தலைவர் விஜயா அருணாசலம், சிவலிங்கம், சரவணன், தசரதன், கஸ்தூரிரகு, கோமதிகார்த்திகேயன், சாமிக்கண்ணு,சின்னபையன், ஆதித்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**த.க. பாலசுந்தரம்**
**ஏப்ரல் 15 (2008)**



**தி.மு.கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.**

**வாலாசா நகர துணைச் செயலாளராகவும் பின்னர் 26 ஆண்டுகள் தொடர்ந்து நகரச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**கழக பொதுக்குழு உறுப்பினராவும் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக 1962ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூர் சிறையில் 70 நாட்கள் பேரறிஞர் அண்ணாவுடன் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**